# மெட்ரோ ரயில் விரிவாக்க திட்டப் பணிகள்: தமிழக தொழில்துறை அமைச்சர் ஆய்வு

சென்னை, பிப்.10: சென்னை வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வழித்தடத்தில் நடைபெற்று வரும் இறுதி கட்டப்பணிகளை தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, இந்த வழித்தடத்தில் பயணிகள் ரயில் சேவையை விரைவில் தொடங்குவதற்கான அனைத்து ஆயத்த பணிகளையும் எடுக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சென்னையில் அடுத்த கட்டமாக, வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான முதல் கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டப் பணிகள் தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய் குமார் ராய் கடந்த 5-ஆம் தேதி முதல் கடந்த 7-ஆம்தேதி வரை மூன்று நாள்கள் ஆய்வு செய்தார்.

மூன்று நாள்கள் ஆய்வில் கிடைத்த தரவுகளைகளை சோதனை செய்து வருகிறார்.

இந்த பணிகள் முடித்தபிறகு, பாதுகாப்பு ஆணையர் சான்றிதழ் வழங்குவார்.

இதையடுத்து,இந்தவழித்தடத்தில் விரைவில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கவுள்ளது. இந்தசேவையை பிரதமர் மோடி தொடக்கி வைக்க வாய்ப்பு உள்ளது.



சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட விரிவாக்கத்தில் நடைபெற்று வரும் இறுதிக் கட்டப் பணிகளை ஆய்வு செய்த தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத். உடன், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் உள்ளிட்டோர்.

இந்தநிலையில், இந்த வழித்தடத்தில் நடைபெற்று வரும் இறுதிக் கட்ட பணிகளை தமிழக தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் புதன்கிழமை ஆய்வு செய்தார். சுங்கச்சாவடி மற்றும் விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையங்களில் முடிவுற்ற பணிகளையும், நடைபெற்று வரும் இறுதிக்கட்ட பணிகளையும் அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, அனைத்து பணிகளையும் குறித்த காலத்தில் விரைந்து முடிக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இதன்பிறகு, மீதமுள்ள 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் முடிவுற்ற பணிகள் குறித்தும், நடைபெற்று வரும் இறுதிக்கட்ட பணிகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், இந்த வழித்தடத்தில் பயணிகள் ரயில் சேவையை விரைவில் தொடங்குவதற்கான அனைத்து ஆயத்தப்பணிகளையும் முடித்து தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச்செயலர் எம்.ஏ.சித்திக் உள்பட பல்வேறு அதிகாரிகள் உடன் இருந்தனர்.